சார்பு நீதிமன்றம், ஸ்ரீவைகுண்டம்

**முன்னிலை : திரு.A.பர்சாத் பேகம் பிஏ.எம்.எல்.,**

சார்பு நீதிபதி, ஸ்ரீவைகுண்டம்

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 3 - ம் நாள், வெள்ளிக்கிழமை.

**அசல் வழக்கு எண்.349/2023**

**CNR.No.TNTT19-001155-2023**

**1** .செங்கமலம் ஜானகி(இறப்பு)

2. ஜெயம்(இறப்பு)

3. பெரியதிருவடி

4. சம்பத்குமார்

5. சடகோபன்

6. வெங்கடேஷ் அழகியசிங்

7. திருவடி

8. அழகிய சிங்கம்ராமன்

( Amended as per Order in I.A.2/2022 , dated 18.08.2022) --- வாதி

/எதிர்/

1.திருவேங்கடம் (இறப்பு)

2. G.P.S.ஆள்வான்(இறப்பு)

3. G.P.S.கருடப்பராமானுஜம்

4. G.P.S.ஸ்ரீனிவாச ராகவன்(இறப்பு)

5. G.P.S. பெரிய திருவடி.(இறப்பு)

6. கீதா என்ற அலமேலு

7. சீமா

8. ஆண்டாள்

9. G.A.தேவபிரான்

10. G.A.அரவிந்தன்

11,G.A.கோவிந்தன்

12. G.A.அழகுரதி

13. G.A.மங்களதீபராஜா

14. கீதா நாச்சியார்

15. G.P.S.S சத்தியநாராயணன் --- பிரதிவாதிகள்

(Amended as per order in I.A.No.11/20 25. dated 25/06/2025)

இவ்வழக்கானது முன்னதாக தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.9/2005 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு அதிகார வரம்பு காரணமாக மாண்புமிகு மாவட்ட நீதிபதி அவர்களின் ஆணை எண்.1124/2017, நாள் 28.02.2017 ன் படி திருச்செந்தூர் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அங்கு அ.வ.எண்.7/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் அதிகார வரம்பு காரணமாக மாவட்ட நீதிபதி அவர்களின் ஆணை எண்.188/2023, நாள் 14.06.2023 இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு அ.வ.எண்.349/2023 ஆக ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 24.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சீனிவாசன் அவர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் இறந்துவிட்ட நிலையிலும், 3 வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.அசோக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 14,15 வது பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. அசோக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் தோன்றா தரப்பினர்களாக கருதி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், 4 முதல் 13 பிரதிவாதிகளை அழைத்தும் ஆஜராகாமல் இருந்த காரணத்தினால் தோன்றா தரப்பினர்களாக கருதி ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையிலும், இரு தரப்பு வாதங்கள் கேட்டறிந்தும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற

பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

இவ்வழக்கானது தபசில் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டதென்று விளம்புகை செய்யக்கேட்டும், தபசில் சொத்தை 3ம் பிரதிவாதியிடமிருந்து வாதிகளுக்கு வாழ்விப்பு செய்து கொடுக்கும்படிக்கும் வழக்கு செலவு வாதிகளுக்கு 3ம் பிரதிவாதியிடமிருந்து கிடைக்கும்படிக்கும் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 1ன் கீழ் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2 சீர் திருத்தம் செய்யப்பட்ட வழக்குரையின் சுருக்கம்** :-

இந்த தபசில் சொத்து ஆதியில் 1வது பிரதிவாதியின் கணவரும் 2 முதல் 7 பிரதிவாதிகளின் தகப்பனாருமான கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு பாத்தியப்பட்டிருந்தது. அவர் குடும்ப நன்மைக்காகவும் முன்கடனை தீர்ப்பதற்காகவும் தபசில் சொத்தை 1வது வாதிக்கு 29.10.2.1982 ல் கிரயம் கொடுத்து அனுபவத்தையும் ஒப்படைத்து விட்டார். அன்றே கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் 1வது வாதியிடம் தபசில் சொத்தில் பெரும்பகுதியை ரூ.1200/-க்கு வாடகைக்கு எடுத்தார். தபசில்சொத்தின் ஒரு பகுதியை ராமகிருஷ்ணமூர்த்தி என்பவர் வாடகைக்கு எடுத்து பின்னர் 1வது வாதியிடம் ஒப்படைத்து விட்டார். அதனையும் சேர்த்து கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் அனுபவித்து வந்தார். கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் வாடகை பாக்கி வைத்திருந்ததால் 1வது வாதி தபசில் சொத்தை காலி செய்ய கேட்டு கருடப்பஸ்ரீனிவாச அய்யங்கார் பெயரில் R.C.O.P 1/99 என்ற வழக்கை தாக்கல் செய்தார். அதில் வாடகை நிரூபிக்கப்படவில்லை என மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

எனவே 1வது வாதிக்கு சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 3 வது பிரதிவாதி வாதியாக இருந்து 1வது வாதி மீதும் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் மீதும் அவரது ஏனைய வாரிசுகள் மீதும் 1/5 பாகம் பிரித்து தரக்கேட்டு அ.வ.எண்.405/94 என்ற வழக்கை தாக்கல் செய்தார். அந்த வழக்கு ஸ்ரீவைகுண்டம் மாவட்ட நீதிமன்றத்தில் அனுமதித்து தீர்ப்பானது. ஆனால் இந்த 1வது வாதி தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் A.S.No. 12/2002 என்ற மேல் முறையீட்டு வழக்கை தாக்கல் செய்தார். அந்த மேல் முறையீட்டு வழக்கு அனுமதிக்கப்பட்டு 1வது வாதி பெற்ற கிரயம் செல்லும் என தீர்ப்பானது. கருடப்ப ஸ்ரீனிவாசன் மேல் முறையீட்டு வழக்கில் இறந்து போனார். தபசில் சொத்து தற்போது பிரதிவாதிகளுடைய அனுபவத்தில் உள்ளது. பிரதிவாதிகள் தபசில் சொத்தை 1வது வாதியிடம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளார். கிரயம் பெற்றவுடன் தபசில் சொத்து 1வது வாதியின் அனுபவத்திற்கு வந்துவிட்டது. அதன் பிறகு கருடப்ப ஸ்ரீனிவாசன் ராமகிருஷ்ணமூர்த்தி என்பவரும் வாடகைக்கு கேட்டார்கள். ஆனால் R.C.O.P 1/99 ல் வாடகை உரிமையை ஒப்புக்கொள்ளவில்லை. 1வது வாதி கருடப்பஸ்ரீனிவாச அய்யங்காருக்கு வாடகைக்கு விட்டிருந்த காரணத்தினாலும் R.C.O.P 1/99 தாக்கல் செய்திருந்த காரணத்தினாலும் 1வது வாதி பெற்ற கிரயத்தை ஒப்புக்கொண்டு 3 வது பிரதிவாதி அ.வ.எண்.405/94 என்று தாக்கல் செய்திருந்த காரணத்தினாலும் இந்த வழக்கு காலாவதியாகவில்லை. எனவே 1வது வாதி விளம்புகை மற்றும் வாழ்விப்பு பரிகாரம் கேட்டுள்ளார். 1வது வாதி வழக்கு மத்தியில் இறந்து போனார் அவருக்கு 2,3 வாதிகள் அவரது வாரிசுகள். பின்னர் 2 வது வாதியும் இறந்துபோனார். அவருக்கு 4

முதல் 8 வாதிகள் வாரிசுகள். கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள். 3 வது பிரதிவாதிக்கு மற்ற பிரதிவாதிகள் வாய்மொழியாக தபசில் சொத்தை கொடுத்துவிட்டபடியால் 3 வது பிரதிவாதி தபசில் சொத்தை வாதிகளுக்கு ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளார்கள். வழக்கு மத்தியில் 2 வது பிரதிவாதி இறந்துபோனார். 8 முதல் 13 பிரதிவாதிகள் வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். பின்னர் 5 வது பிரதிவாதி இறந்துபோனார். 14 மற்றும் 15 வது பிரதிவாதிகள் அவரது வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். எனவே தபசில் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்து தபசில் சொத்தை 3 வது பிரதிவாதியிடமிருந்து வாழ்விப்பு செய்ய கேட்டு இந்த தாவா.

**3) 3 வது பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை சுருக்கம்**

வாதியின் வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதல்ல. வழக்குரை சங்கதிகள் உண்மையல்ல. தபசில் சொத்து 1 வது பிரதிவாதியின் கணவரும் மற்ற பிரதிவாதிகளின் தகப்பனாருமான கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு பாத்தியப்பட்டது என்பது உண்மை. ஆனால் எவ்வாறு பாத்தியப்பட்டது என்று வாதி பிராதில் சொல்லவில்லை என்பது வாதியின் தீய உள்நோக்கத்தை காட்டுகிறது. உண்மையில் தபசில் சொத்து 1 வது பிரதிவாதியின் கணவரான காலம்சென்ற கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் மற்றும் அவருடைய மக்களான 2 முதல் 7 பிரதிவாதிகளின் இந்து அபிபக்த கூட்டு குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது. கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் குடும்ப நன்மைக்காகவும் முன் கடன்களை தீர்ப்பதற்காகவும் தபசில் சொத்தை 29.10.1982 ம் தேதியில் வாதிக்கு கிரயம் கொடுத்து அனுபவத்தை

ஒப்படைத்ததாகவும் அன்றையதினமே தபசில் சொத்தின் பெரும் பகுதியை ரூ.1200/-க்கு அவர் வாடகைக்கு எடுத்துக்கொண்டதாகவும் தபசில் சொத்தின் ஒரு பகுதியை ராமகிருஷ்ணமூர்த்தி என்பவர் வாடகைக்கு எடுத்துக்கொண்டதாகவும் பின்னர் ராமகிருஷ்ணமூர்த்தி வாதியிடம் ஒப்படைத்துவிட்டதாகவும் அதனையும் சேர்த்து கருடப்பஸ்ரீனிவாச அய்யங்கார் அனுவித்து வந்தார் என்பது உண்மையல்ல. கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் கூட்டுக்குடும்ப நலனுக்கு விரோதமாக செயல்பட்டு வந்தார். அவர் குடித்து விட்டு ஊதாரித்தனமாக செலவு செய்து கூட்டுக்குடும்ப நலனில் அக்கறை இல்லாமல் தன் இஷ்டம்போல் வாழ்ந்து வந்தார். அவர் கூட்டுக்குடும்பத்தை நிர்வகித்து வரவில்லை. இந்த விவரங்கள் வாதிக்கு நன்கு தெரியும் தபசில் சொத்துக்களை அபகரித்துக்கொள்ள வேண்டும் என்ற தீய எண்ணத்தில் கூட்டுக்குடும்ப இதர உறுப்பினர்களுக்கு தெரியாமல் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் தனது ஊதாரித்தனமான செலவுக்காக தபசில் சொத்தை வாதிக்கு கிரய பத்திரமாக பிறப்பித்து கொடுத்துள்ளார். கிரய பத்திரத்தில் கண்ட பண பற்று விவரங்கள் உண்மையல்ல. அதில் கண்ட தொகை குடும்ப நலனுக்காகவோ குடும்ப கடனை தீர்ப்பதற்காகவோ பயன்படுத்தவில்லை. கிரயம் ஏற்பட்ட காலத்தில் பிரதிவாதிகள் குடும்பத்தில் கடன் எதுவும் கிடையாது. பிரதிவாதிகள் குடும்பத்துடன் வசித்து வரும் வீடுகளான பிராது தபசில் சொத்துக்களை விற்பனை செய்ய வேண்டிய அவசியமும் கிடையாது. தன்னுடைய ஊதாரித்தனமான செலவுகளுக்காக மேற்படி கிரய பத்திரத்தை மேற்படி கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் பிறப்பித்து கொடுத்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தை ஊதாரித்தனமாக செலவு செய்துவிட்டார். இந்து

அபிபக்த கூட்டுக்குடும்பத்தின் நிர்வாகி என்ற முறையில் மேற்படி கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் கிரய ஆவணத்தை பிறப்பித்து கொடுக்கவில்லை. கிரய ஆவணம் இந்த பிரதிவாதியையும் கூட்டுக்குடும்பத்தின் இதர உறுப்பினர்களையும் கட்டுப்படுத்தாது. மேற்படி கிரய ஆவணம் மூலம் வாதிக்கு தபசில் சொத்தில் முழு பாத்தியம் ஏற்படவில்லை. கிரய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல. தபசில் சொத்துக்களில் பிரதிவாதி தனக்குரிய 1/5 பாகத்தை பிரிவினை செய்து தரக்கேட்டும், இந்த பிரதிவாதி கூட்டுக்குடும்ப உறுப்பினர்களுடன் தபசில் சொத்தை கூட்டாக அனுபவித்து வருவதற்கு இந்த வாதி இடையுறு செய்யக்கூடாது என சாஸ்வத உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வாதிகள் மற்றும் கூட்டுக்குடும்ப இதர உரிமையாளர்கள் மீதும் வழக்கு தாக்கல் செய்து ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.405/94 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. அந்த வழக்கில் தபசில் சொத்தின் அனுபவம் கிரயத்திற்கு பின்பு தன்னிடம் இருப்பதாக இந்த பிரதிவாதி மற்றும் இதர கூட்டுக்குடும்ப உரிமையாளர்களின் அனுபவத்தில் இல்லை எனவும் தெரிவித்து எதிர்வழக்குரை தாக்கல்செய்தார். மேற்படி அ.வ.எண்.405/94 நிலுவையில் இருக்கும் போது வாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை சங்கதிகளுக்கு மாறாக தபசில் சொத்தை கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு இந்த வாதி கிரயம் பெற்ற நாளிலேயே வாடகைக்கு விட்டது போலும் வாடகை பாக்கி உள்ளது போன்றும் காண்பித்து பிரதிவாதிகளை தபசில் சொத்திலிருந்து வெளியேற்ற கேட்டு RCOP.No 1/1999 என்ற மனுவை தாக்கல் செய்தார். அந்த மனு விசாரணைக்கு பின் வாதியின் கட்சி பொய்யானது என நீதிமன்றம் தெளிவுபட அறிந்து RCOP.No.1/99 மனு

தள்ளுபடியானது. அதனை ஆட்சேபித்து இந்த வாதி மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை. எனவே தீர்ப்பு உறுதியாகிவிட்டது. பின்பு அ.வ.எண்.405/94 முழு விசாரணைக்கு பிறகு இந்த பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பானது. அதன் பேரில் இந்த வாதி தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண். 18/2002 என்ற வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கு வாதிக்கு ஆதரவாக 23.8.2004 ம் தேதி தீர்ப்பானது. அந்த தீர்ப்பை ஆட்சேபித்து இந்த பிரதிவாதி சென்னை உயர் நீதிமன்றத்தில் SA .No.374/2004 என்ற 2 வது மேல் முறையீடு வழக்கு தாக்கல் செய்து அதில் Crmp.No 1940/2004 ல் இடைக்கால உறுத்துக்கட்டளை பெற்றார். இந்த விவரங்கள் அனைத்தையும் தெரிந்து வாதி மேல்முறையீட்டு வழக்கு விவரங்களை வேண்டுமென்றே மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்குரை இதர சங்கதிகள் உண்மையல்ல. கிரயம் பெற்றவுடன் பிராது தபசில் சொத்துக்கள் வாதியின் அனுபவத்தில் வந்துவிட்டது என்பதும், அதன் பிறகு தான் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் என்பவரும் ராமமூர்த்தி என்பவரும் வாடகைக்கு பெற்றார்கள் என்பதும் உண்மையல்ல. இந்த வழக்கு காலாவதி ஆகவில்லை என வாதி கூறியிருக்கும் காரணம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை. வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே கட்டிட சுவான்தார் வாடகைதாரர் என்ற உறவு எப்போதும் கிடையாது .சுவான்தாரர் பாத்தியத்தையிலேயே பிரதிவாதிகள் தபசில் சொத்தை அனுபவித்து வருகிறார்கள். தபசில் சொத்தின் சந்தை மதிப்பு ரூ.4,00,000/- ற்கும் மேல் பெறும். வாதி சொத்தின் மதிப்பை குறைத்து மதிப்பீடு செய்து குறைவான நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார். வாதி கேட்டுள்ள பரிகாரம் வாதிக்கு

கிடைக்கத்தக்கதல்ல. வாதியின் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. அவர் கேட்டுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே வழக்கை தள்ளுபடி செய்ய கேட்டு எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**4) 3 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர் வழக்குரையின் சுருக்கம்**

வாதிகளின் சீர்திருத்த பிராது 5 வது பாராவில் 3 வது பிரதிவாதிக்கும் மற்ற பிரதிவாதிகள் வாய்மொழியாக தபசில் சொத்தை கிரயம் கொடுத்துவிட்டார் என்றும், 3 வது பிரதிவாதி தபசில் சொத்தை வாதிகளுக்கு ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளார் என்றும் கூறியிருப்பது உண்மையல்ல. உண்மையில் 3,6 முதல் 15 பிரதிவாதிகளும் மற்றும் அவர்களது முன் பாத்தியஸ்தர்களும் தபசில் சொத்துக்களில் அவரவர் பாகத்தை அவரவர் பாக உரிமையில் அனுபவித்து வருகிறார்கள். 6 முதல் 15 பிரதிவாதிகளோ அவரது முன் பாத்தியஸ்தர்களோ தபசில் சொத்தினை 3 வது பிரதிவாதிக்கு அவர்கள் பாகத்தை பொறுத்து விட்டுக்கொடுக்கவில்லை. வாதிகள் தபசில் சொத்தை மற்ற பிரதிவாதிகள் 3 வது பிரதிவாதிக்கு விட்டுக்கொடுத்ததாக பொய்யாக கூறியுள்ளார்கள். 2 வது வாதிக்கு 4 முதல் 8 வாதிகளே வாரிசாக சேர்க்கப்பட்டு தாக்கல் செய்த மனு அனுமதிக்கப்பட்டு வழக்கு சீர்திருத்தம் செய்யப்பட்டது. 3 வது பிரதிவாதிக்கு மற்ற பிரதிவாதிகள் தபசில் சொத்தில் அவரது பாகத்தை முன்னமே வாய்மொழியாக விடுதலை செய்து கொடுத்துவிட்டனர் என்ற வாசகத்தை இடை நிலை மனு 2/22 ல் இடைச்சொருகலாக சேர்த்துள்ளார்கள். சீர்திருத்தம் செய்ய கேட்டுள்ள பகுதி சரியான விவரத்துடன் இல்லை. சீர்திருத்த பிராதில் கண்ட இதர சாட்டுரைகள் உண்மையல்ல. 3,14,15 பிரதிவாதிகளை பொறுத்து

வழக்கை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

**5.** வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள வழக்குரை, எதிர்வழக்குரை, மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் 27.1.2006 தேதி கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| 1. | **தபசில் சொத்தை வாதி அனுபவம் செய்து வருகிறாரா?** |
| 2. | **வாதி கோரும் விளம்புகை பரிகாரம் கிடைக்ககூடியதா?** |
| 3. | **வாதி கோரும் வாழ்விப்பு பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?** |
| 4 | **வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்னென்ன?** |

**6.** இவ்வழக்கின் 1வது வாதி திருமதி.செங்கமலம் ஜானகி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான ஆவணங்கள்குறியீடு செய்யப்பட்டுள்ளன. அவரை குறுக்குவிசாரணை செய்யவில்லை. பின்னர் அவர் இறந்துபோனார். எனவே அவரது சாட்சியம் நீக்கப்பட்டது. பின்னர் 7வது வாதி வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டார். முன்னதாக குறியீடு செய்யப்பட்ட 1 முதல் 13 ஆவணங்களுடன் சேர்த்து மேலும் 3 ஆவணங்களும் ஆக கூடுதல் 1 முதல் 16 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன. 3 வது பிரதிவாதி பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.1,2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

**7.** வாதி தரப்பில் எழுத்துமூல வாதுரை தாக்கல் செய்யப்பட்டது. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் மற்றும் ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

**8**. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எழுத்துப்பூர்வ வாதுரை தாக்கல் செய்துள்ளார். 3 முதல் 7 பிரதிவாதிகளுடைய தகப்பனார் வழக்கு சொத்தை 1வது வாதிக்கு 29.10.1982 ல் கிரயம் கொடுத்து அன்று முதல் அதே சொத்தில் வாடகைதாரராக குடியிருந்து வந்தார். இந்நிலையில் வாடகை செலுத்தவில்லை என்பதால் வாடகை நிலுவை வைத்துள்ள காரணத்தினால் வழக்கு சொத்தை காலி செய்து சுவாதீனம் ஒப்படைக்கும்படி 1வது வாதி RCOP.No.1/99 தாக்கல் செய்து பின்பு தள்ளுபடியானது இந்நிலையில், 3 வது பிரதிவாதி 1வது வாதி பெயரில் உள்ள கிரயம் செல்லாதது என்று சொல்லி 1வது வாதி பெற்ற கிரயத்தை ஆட்சேபித்து தபசில் சொத்துக்கள் தனது தகப்பனாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்றும் அதில் தனக்கு 1/5 பாகம் உள்ளது என்றும் அந்த பாகத்தை பிரித்து தரும்படியும் மேலும் தபசில் சொத்தில் தங்களது அனுபவத்திற்கு 1வது வாதி இடையூறு செய்யக்கூடாது என அசல் வழக்கு எண்.405/94 என்ற வழக்கை தாக்கல் செய்தார். அந்த வழக்கு வாதியான இந்த 3 வது பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பானது. அதன் பேரில் இந்த வழக்கின் 1வது வாதி தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் As.No. 18/2002 என்ற மேல்முறையீட்டு வழக்கை தாக்கல் செய்தார். அந்த வழக்கில் 1வது வாதியின் கிரயம் செல்லும் என்று தீர்ப்பானது. அதன் பேரில் 3 முதல் 7 பிரதிவாதிகள் சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் 2வது மேல்முறையீடு தாக்கல் செய்து அந்த 2வது மேல்முறையீடு வழக்கும் தள்ளுபடியாகி தபசில் சொத்து இந்த வழக்கின் 1வது வாதிக்கு கிரய பாத்தியப்பட்டது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்குகள் தொடர் நிலுவையில் இருந்த காரணத்தினால் இந்த வழக்கு காலாவதி தோசத்தால்

பாதிக்கப்படவில்லை. 1வது வாதி கிரயம் பெற்ற காலம் முதல் அவர் பெயரிலேயே பஞ்சாயத்து வரி உள்ளது. 1வது வாதிக்கு 3வது பிரதிவாதியின் தகப்பனார் கர்த்தா என்ற நிலையில் கொடுத்த கிரயம் செல்லத்தக்கது என்று தீர்ப்பாகி உள்ளபடியால் 3 வது பிரதிவாதி தற்போது தாக்கல் செய்துள்ள ஆவணம் தேவையற்ற ஆவணமாகும். எனவே வா.சா.ஆ.7 படி தபசில் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது. ஆகையினால் சொத்தின் சுவாதீனத்தை 2ம் பிரதிவாதிகளிடம் ஒப்படைக்கும்படி தீர்ப்பு வழங்க கேட்டுக்கொண்டார்.

9. பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், வாதிகளுடைய வழக்கு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. வாதிகள் கேட்டுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல. 1வது வாதியின் வாரிசு விவரத்தை உரிய வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் வாயிலாக நிரூபிக்கவில்லை. தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டதாக நிரூபிக்கவில்லை. இந்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. RCOP.No.1/99 ல் தபசில் சொத்து 3ம் பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கை காலம் கடந்து தாக்கல் செய்துள்ளார். விளம்புகை பரிகாரம் கேட்டு 3 ஆண்டுகளுக்குள்ளாக தாக்கல் செய்யவில்லை. ஆகையினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று வாதிட்டு அதற்கு ஆதரவாக Saroja Vs. Chinnusamy(Dead) by L.Rs and Ors., K.Ramachandran VS.K.Ganeshmoorthy and Ors., The Hon'ble Madras High Court, in S.A.No.987 of 2006 and M.P.No.1 of 2006 Raghuraja Vs. Philomina and others ஆகிய என்ற நான்கு முன் தீர்ப்புகளை தாக்கல் செய்துள்ளார்.

**10**. இரு தரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

**11. எழுவினா 1**

| | |
|---|---|
| **1** | **தபசில் சொத்தில் வாதியே அனுபவம் செய்து வருகிறாரா?** |
| **2** | **வாதி கோரும் விளம்புகை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?** |

தபசில் சொத்து ஆதியில் 1வது பிரதிவாதியின் கணவரும் 2 முதல் 7 பிரதிவாதிகளின் தகப்பனாருமான கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பது உண்மை. 29.10.1982 தேதியில் மேற்படி கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் தபசில் சொத்தை 1வது வாதிக்கு பதிவுகிரயம் கொடுத்து அனுபவத்தை ஒப்படைத்துவிட்டார் என்றும் அன்றையதினமே கருடப்பஸ்ரீனிவாச அய்யங்கார் 1வது வாதியிடம் தபசில் சொத்தின் பெரும்பகுதியை ரூ.1200 க்கு வாடகைக்கு எடுத்தார் என்றும் தபசில் சொத்தின் ஒரு பகுதியை ராமகிருஷ்ணமூர்த்தி என்பவர் வாடகைக்கு எடுத்து பின்னர் அதை 1வது வாதியிடம் ஒப்படைத்துவிட்டார் என்றும் அதையும் சேர்த்து கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் அனுபவித்து வந்தார் என்றும் ஆனால் வாடகை பாக்கி வைத்திருந்ததால் தபசில் சொத்தை காலி செய்ய சொல்லி 1வது வாதி, கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் பெயரில் RCOP.No.1/99 தாக்கல் செய்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் வாதியின் வழக்குரை சங்கதி அமைந்துள்ளது.

**12**. இந்நிலையில் இந்த வழக்கின் 3 வது பிரதிவாதி தபசில் சொத்தை தகப்பனார் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் மற்றும் உடன் பிறந்தவர்களுக்கு எதிராக வழக்கு

சொத்தில் தனக்குரிய 1/5 பாகத்தை பிரித்து தரும்படி கேட்டு பாக வழக்கு அ.வ.எண்.405/94 என்ற பாக வழக்கை தாக்கல் செய்து, அந்த வழக்கு அவருக்கு ஆதரவாக தீர்ப்பானதாகவும் இந்து கூட்டுக்குடும்ப சொத்தை விற்பனை செய்ய கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு உரிமை இல்லை என்றும், 1வது வாதியின் கிரயம் ஆட்சேபிக்கப்பட்டு தபசில் சொத்தில் தங்களது அனுபவத்திற்கு 1வது வாதி இடையூறு செய்யக்கூடாது என 1வது வாதிக்கு எதிராக மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார். வழக்கின் தீர்ப்பை ஆட்சேபித்துள்ள 1வது வாதி தபசில் சொத்து தனக்கு கிரய பாத்தியப்பட்டதாக கூறி மேல் முறையீட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த மேல் முறையீட்டு வழக்கு 1வது வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதனை ஆட்சேபித்து இந்த 3வது பிரதிவாதி 2வது மேல்முறையீட்டு வழக்கினை சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்துள்ளார். அந்த 2வது மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடியானது. இந்நிலையில் அசல் வழக்கு மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த 1வது வாதி தபசில் சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

13. 1வது வாதி வழக்கு மத்தியில் இறந்துபோனார். அவருடைய வாரிசுகள் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார்கள். இந்த வழக்கில் 3வது பிரதிவாதி, 1வது வாதிக்கு கிரயம் கொடுத்த கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருடைய மகன் ஆவார். கூட்டு குடும்ப இதர நபர்களுக்கு தெரியாமல் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் தனது ஊதாரித்தனமான செலவுகளுக்காக தபசில் சொத்துக்களை வாதிக்கு கிரயம் கொடுத்துள்ளார் என

3 வது பிரதிவாதி எதிர்வியாஜ்ஜியம் செய்துள்ளார். கிரய பணத்தை ஊதாரித்தனமாக செலவிட்டதாகவும், கூட்டுக்குடும்ப நிர்வாகி என்ற முறையில் கிரயம் கொடுக்கவில்லை எனவும் மேற்படி கிரயம் இந்து அபிபக்த கூட்டு குடும்பத்தின் உறுப்பினர்களை கட்டுப்படுத்தாது எனவும் 1 வது வாதி பெயரிலுள்ள கிரயம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல எனவும் முந்தைய வழக்கில் சொத்தின் அனுபவமும் உடமையும் பிரதிவாதிகளிடம் உள்ளதாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில் காலவரையறைக்குள் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை. வாதியின் வழக்கு காலாதியாகிவிட்டது. எனவே வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

**14**) 1 வது வாதியின் வாரிசு விவரங்களை நிரூபிக்கும் பொருட்டு வாதிகள் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என ஆட்சேபனை செய்துள்ளார். ஆனால் 1 வதுவாதியின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஆவணமாக குறியீடு செய்யப்படவில்லை. அவ்வகையில் மேற்படி ஆட்சேபனையை இந்த நீதிமன்றம் நிராகரிக்கிறது.

**15**. வாதியின் வழக்கை நிரூபிக்கும் பொருட்டு இந்த வழக்கின் 7 வது வாதி வா.சா.2 ஆக வாய்மொழி சாட்சியம் அளித்துள்ளார் வழக்கு சங்கதிகளை அனுசரித்து அவரது முதல் விசாரணை எழுத்துமூல பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**16**. இந்த வழக்கின் 1 வது வாதி தாவா சொத்தை 29.10.1982 ம் தேதியில் 3 வது பிரதிவாதியின் தகப்பனார் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காரிடம் இருந்து கிரயம் வாங்கியுள்ளார். அந்த கிரய பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. 3 ம் பிரதிவாதியின் தந்தை கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் 1வது வாதிக்கு தாவா சொத்தை கிரயம் பதிவு செய்து கொடுத்த விவரம் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. ஆனால் கிரய சொத்தானது பிரதிவாதிகள் அடங்கிய இந்து அபிபக்த கூட்டுக்குடும்ப சொத்து என்றும் 3 வது பிரதிவாதியின் தகப்பனார் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் இந்து கூட்டுக்குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்தை தனிப்பட்ட முறையில் 1ம் வாதிக்கு கிரயம்கொடுக்க உரிமையில்லை என்றும் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் குடும்ப இதர உறுப்பினர்களுடைய பாகத்தை சேர்த்து கிரயம் கொடுக்க முடியாது என்றும் கூட்டுக்குடும்ப இதர உறுப்பினருடைய பாகத்தை அந்த கிரயம் கட்டுப்படுத்தாது என்றும் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருடைய பாகத்தை பொறுத்து மட்டுமே அவரது கிரயம் கட்டுப்படுத்தும் எனவும் 3 வது பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

**17.** கிரயம் பெற்ற 1வது வாதி அன்றையதினமே தபசில் சொத்தில் கிரயம்கொடுத்த கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு வாடகைக்கு கொடுத்ததாகவும் வாடகைதாரர் முறையில் அனுபவம் செய்து வந்த கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் வாடகை நிலுவை வைத்த காரணத்தினால் தபசில் சொத்தை காலி செய்யும்படி கேட்டு அவருக்கு எதிராக RCOP.No. 1/99 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த RCOP. வழக்கில் ஸ்ரீனிவாச அய்யங்கார் 1வது எதிர்மனுதாரராகவும். கருடப்ப ராமானுஜம் என்ற இந்த வழக்கில் 3 வது பிரதிவாதி 2 வது எதிர்மனுதாரராகவும் இருந்து வழக்கு இரு தரப்பு விசாரணைக்கு பிறகு R.C.OP மனு 29.9.2000 ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டது. முன்னதாக RCOP மனுவில் 2 வது எதிர் மனுதாரரும் இந்த

வழக்கில் 3 வது பிரதிவாதியுமான கருடப்ப ராமானுஜம் வாதியாக இருந்து அவர் உடன் பிறந்தவர்களான G.P.S ஆழ்வார், G.P.S ஸ்ரீனிவாசராகவன், G.P.S பெரிய திருவடி, ஆகியோர்களை 1 முதல் 3 பிரதிவாதிகளாகவும் தனது தகப்பனார் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காரை 4 வது பிரதிவாதியாகவும் இந்த வழக்கின் 1ம் வாதி செங்கமலம் ஜானகியை 5 வது பிரதிவாதியாகவும் சேர்ந்து தபசில் சொத்தில் தனக்கும் தன் உடன் பிறந்தவர்களான 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் தன் தகப்பனாருடன் சேர்த்து ஐந்து பங்கு எனவும் அதில் தனக்குரிய 1/5 பாகத்தை பாகம் பிரித்து தனக்கு சுவாதீனம் வழங்கும்படியும் 5 வது பிரதிவாதியான செங்கமலம் ஜானகி தபசில்சொத்தில் தங்களது அனுபவத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என அவருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு அ.வ.எண்.405/94 என்ற வழக்கை 15.09.1994 ம் தேதியில் தாக்கல் செய்து இந்த வழக்கு 21.12.2001 ம் தேதியில் அனுமதித்து தீர்ப்பானது.

**18.** மேற்படி தீர்ப்பினை ஆட்சேபித்துள்ள 5 வது பிரதிவாதியான இந்த வழக்கில் 1 ம் வாதி செங்கமலம் ஜானகி, 2 வது மேல்முறையீட்டு வழக்கு எண். 18/2002 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார். அந்த வழக்கு தூத்துக்குடி சார்பு நீதிமன்றத்தில் 23.8.2004 ம் தேதியில் அனுமதித்து தீர்ப்பானது. அதில் ”வழக்கு சொத்து இந்த 1 ம் வாதி செங்கமலம் ஜானகியின் கிரயதாரான கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் செங்கமலம் ஜானகிக்கு கிரயம் கொடுப்பதற்கு முன்பு தாவா சொத்தை செங்கமலம் ஜானகிக்கு 28.3.1973 ல் அடமான பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். அந்த கிரய பத்திரமும் அடமான பத்திரமும் பி.வா.சா.ஆ.12 ஆக குறியிடப்பட்டுள்ளது. கிரய பத்திரத்தில் தனது

குடும்ப செலவுக்காகவும் பிள்ளைகள் படிப்பு செலவுக்காகவும் சில்லறை கடன்களை தீர்க்க வேண்டியதற்காகவும் கிரயம் கொடுத்ததாக தெளிவாக தெரியவருகிறது எனவும் அவ்வகையில் 4 வது பிரதிவாதியான கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் தனது குடும்ப செலவுக்காக குடும்ப கர்த்தா என்ற முறையில் செங்கமலம்ஜானகிக்கு கிரயம் கொடுத்துள்ளார். அது தவறு என எடுத்துக்கொள்ள முடியாது. கர்த்தாவாக செயல்பட்டு அவர் 1982 ம் வருடம் கிரயம் கொடுத்தபோது வாதி கருடப்ப ராமானுஜம் இளவராக இருந்தார் எனவும் தெரியவில்லை. 1994 ம் வருடம் இவ்வழக்கை 25 வது வயதில் தாக்கல் செய்துள்ளார். எனவே மேஜராகி 7 ஆண்டுகள் வரை இவ்வழக்கு தாக்கல் செய்யவில்லை. ஆகையால் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் நல்ல எண்ணத்தில் கிரயம் கொடுத்துள்ளார்" என மேல் முறையீட்டு வழக்கு 18/2002 ல் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே தாவா கிரயம் குடும்ப நலனுக்காக கொடுக்கப்பட்டது என்று முடிவு செய்து அதில் வாதி 1/5 பாகம் கோருவதை ஏற்கமுடியாது என தீர்மானித்து இந்து கூட்டுக்குடும்ப சொத்துக்களாக இருந்தாலும் கர்த்தாவாக இருந்து கொடுத்த கிரயம் தவறு இல்லை என முடிவுசெய்யப்பட்டுள்ளது.

**19**. அதனை தொடர்ந்து இந்த 1ம் வாதி செங்கமலம் ஜானகி தாவா சொத்தை பொறுத்து தனக்கு விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கேட்டு 1வது மேல் முறையீட்டு வழக்கு அனுமதிக்கப்பட்ட ஓர் ஆண்டுக்குள்ளாக இந்த அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு வழக்கின் தீர்ப்பை ஆட்சேபித்து கருடப்ப ராமானுஜ அய்யங்கார் தாக்கல் செய்த 2வது மேல் முறையீட்டு வழக்கும் மேல் முறையீட்டு வழக்கு எண்.18/02 வழக்கின் தீர்ப்பை உறுதி செய்து உத்தரவாகியுள்ளது.

அவ்வகையில் வழக்கு சொத்தை 3 வது பிரதிவாதியான கருடப்ப அய்யங்காருடைய தகப்பனார் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார், 1 வது வாதி செங்கமலம் ஜானகிக்கு இந்து கூட்டுக்குடும்ப கர்த்தா என்ற முறையில் கிரயம் செய்து கொடுத்துள்ளார் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

**20**. இந்த வழக்கில் மேற்படி RCOP.No. 1/99 க்கான தீர்ப்புரை, தீர்ப்பாணை வா.சா.ஆ.1 ,2 ஆகவும், அ.வ.எண்.405/94 க்கான தீர்ப்புரை தீர்ப்பாணை வா.சா.ஆ.4,5 ஆகவும் மேல்முறையீட்டு வழக்கு எண் 18/2002 தீர்ப்புரை, தீர்ப்பாணை வா.சா.ஆ.5,6 ஆகவும் 2 வது மேல்முறையீட்டு வழக்கு எண்.374/2004 ல் தீர்ப்புரை தீர்ப்பாணை வா.சா.ஆ-14,15 ஆகவும் 1 வது வாதியுடைய கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். 2 வது மேல் முறையீட்டு வழக்கின் தீர்ப்பின் பேரில் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு அனுமதி நிலையிலேயே தாக்கல் செய்யப்பட்டு உத்தரவாகியுள்ளது. அந்தஉத்தரவின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.16 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களில் வா.சா.ஆ.1 முதல் 6, 14,15,16 ஆவணங்கள் நீதிமன்றங்கள் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை அது உபய தரப்புகளை கட்டுப்படுத்தக்கூடியது. 2 வது மேல் முறையீட்டு வழக்கு எண்.18/2002 தீர்ப்பானது உறுதி செய்யப்பட்டுள்ளது. அது உபய தரப்பினரை கட்டுப்படுத்தக்கூடியது என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே மேற்படி ஆவணங்கள் குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**21**. வா.சா.ஆ-7 1 வது வாதி செங்கமலம் ஜானகி பெயரிலுள்ள தாவா சொத்திற்கான கிரய பத்திரம் 3 வது பிரதிவாதி கருடப்ப ராமானுஜ அய்யங்காரின்

தகப்பனார் தாவா சொத்தை பொறுத்து 1வது வாதி பெயருக்கு பதிவு செய்து கொடுத்துள்ளார். அதனை தொடர்ந்து 1995 முதல் 2006 வரை 1வது வாதி பெயரில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ.8 முதல் 13 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. தாவா சொத்துக்கு 1வது வாதி கிரய பாத்தியப்பட்டவர் என்ற நிலையில் சொத்தின் உரிமையாளர் நிலையில் வீட்டு வரி செலுத்தியதாக அதன் ரசீதுகளை தாக்கல் செய்துள்ளார். மேற்படி ஆவணங்கள் வாயிலாக 1வது வாதி செங்கமலம் ஜானகிக்கு கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் இந்து அபிபக்த கூட்டுக்குடும்ப கர்த்தா என்ற முறையில் கிரயம் எழுதிக்கொடுத்துள்ளார் என்று துலங்குகிறது. மாண்புமிகு உயர் நீதிமன்றம் 2வது மேல் முறையீட்டு வழக்கில் அதனை உறுதி செய்து தீர்ப்பளித்துள்ளது.

**22.** இந்நிலையில் இந்த வழக்கின் 3வது பிரதிவாதி வாதியின் வழக்கை ஆட்சேபித்து பி.வா.சா.ஆ.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவரது முதல் விசாரணை சாட்சியத்தில்

> ” மாண்பமை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ள Ex.7 ஆவணத்தின் 1வது பக்கத்தில் உள்ளவாறு " தபசில் சொத்தும், வேறு சொத்தும் எனக்கு 28.10.1946 ம் தேதியில் ஆழ்வார்திருநகரி சப்டி ஆபிஸ் 3-16-19/1946 நிர் ரிஜிஸ்தர் உயில் தஸ்தாவேஸ் மூலம் எனக்கு சர்வசுதந்திர பாத்தியப்பட்டு” என கண்டுள்ளது. மேற்படி உயில் ஆவணமானது இன்றைய தேதிவரை மேற்படி வாதிகளால் மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. அதற்கான

காரணங்களை மேற்படியார்களே சட்டப்படி நீதிமன்றத்தில் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்கள். மேற்படி அசல் வழக்கில் 1வது வாதி பெயருக்கு எனது தகப்பனார் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணமானது சட்டப்படி நிலைக்கத்தக்கது என்பதை மாண்பமை நீதிமன்றத்தில் நிரூபிக்கும் பொறுப்பு மேற்படி வாதிகளையே சார்ந்ததாகும். ஏனென்றால் மேற்படி Ex.A7 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரமானது ஆதியில் என் தந்தை வழி பூட்டனார் கெருடப்பன் தம்பு ஆழ்வார்அய்யங்கார். எனது கொள்ளு தாத்தாவுமான கெருடப்பன்ஸ்ரீனிவாச அய்யங்கார் மற்றும் அவரது சகோதரர்களான கெருடப்பன், ஆழ்வார் அய்யங்கார் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு அவர்களிடையே 1887 ம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பாத்தியப்பட்டு (ஆழ்வார் திருநகரி சார்பதிவகம் 484/1887) எங்களுக்கும் பாத்தியப்பட்டு பிரிக்கப்படாமல் கூட்டுக்குடும்ப சொத்தாக இன்று வரை அனுபவம் செய்து வருகிறோம். வா.சா.ஆ-7 ல் தபசில் சொத்தை கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காரூக்கு 28.10.1946 ம் தேதியில் ஆழ்வார் திருநகரி சப்டி ஆபிஸ் 3-16-19/1946 நம்பர் ரிஜிஸ்டர் உயில் தஸ்தாவேஜு மூலம் பாத்தியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. அந்த உயில் ஆவணத்தை வாதி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதற்கான காரணத்தை வாதிகளே நிரூபிக்க

வேண்டும்”

என சாட்சியம் சொல்லியுள்ளார்.

**23**. பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் மூலம் தனக்கு பாத்தியப்பட்ட சொத்தை செங்கமலம் ஜானகிக்கு கிரயம் கொடுப்பதாக 3 வது பிரதிவாதியின் தகப்பனார் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் வா.சா.ஆ.7 ல் கூறியுள்ளார். இந்த வழக்கின் 3 வது பிரதிவாதி தரப்பில் 1வது வாதி பிரிபடாத இந்து கூட்டு அபிபக்த குடும்ப சொத்துக்களை கிரயம் வாங்கியுள்ளதாகவும் அந்த சொத்து கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றும் 3 வது பிரதிவாதி தாக்கல் செய்துள்ள அ.வஎண்.405/94 ல் சொல்லியுள்ளார். ஆனால் பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்கும் பொருட்டு ஆவணம் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ-7 ல் கிரயதாரர் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் அந்த கிரய சொத்து பூர்வீக சொத்து என கூறவில்லை. தனக்கு உயில்படி பாத்தியப்பட்டது என்றே சொல்லியுள்ளார். எனவே வா.சா.ஆ.7 ஆவண சங்கதிகளுக்கு விரோதமாக இந்த 3 வது பிரதிவாதி தபசில் சொத்து தனது தகப்பானருக்கும் தனக்கும் பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது. அவரது சாட்சியமும் வா.சா.ஆ 7 ஆவணத்திற்கு விரோதமாக உள்ளது.

**24**. உயில் ஆவணப்படி தனக்கு பாத்தியப்பட்டதாக சொல்லியுள்ள கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் அந்த சொத்தை தனித்த உரிமையாளராக அனுபவித்து தன் விருப்பப்படி அதனை கிரயம் செய்ய சட்டப்படி உரிமை உடையவர் ஆகிறார். இந்நிலையில் வா.சா.ஆ-7 ல் சொல்வது போல் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம்

எதுவும் இல்லை என 3 வது பிரதிவாதி மறுத்துரைக்கவில்லை. உயில் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்று மட்டுமே ஆட்சேபித்துள்ளார். 3 வது பிரதிவாதி வாதியாக இருந்து தாக்கல் செய்த அ.வ.எண்.405/94 என்ற வழக்கில் தாவா சொத்து தங்களது பூர்வீக சொத்து என்று கூறியுள்ள அவரது நிலைப்பாட்டிற்கு விரோதமாக தற்போது உயில் படி பாத்தியப்பட்டதாக வா.சா.ஆ.7 ஆவணத்தில் உள்ளதை வாதி நிரூபிக்க வேண்டும் என எதிர்வியாஜ்ஜியம் செய்துள்ளார்.

**25**. 2 வது மேல் முறையீட்டு வழக்கு எண்.374/2005 ல் மாண்புமிகு உயர் நீதிமன்றம் பி.வா.சா.ஆ-1ல் கிரயம் கொடுத்த கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு அந்த சொத்து உயில் படி பாத்தியப்பட்டுள்ளது என்று கண்டு கிரயம் எழுதிக்கொடுத்ததை கீழமை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டதாகவும் அதற்கு விரோதமாக சாட்சியமும் இல்லை எனவும் அதேசமயம் ஆவணத்தில் கண்டுள்ள வாசகத்திற்கு விரோதமாக சொத்து இந்து கூட்டுக்குடும்ப சொத்து என சொல்லியுள்ளதை பரிசீலித்து இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 92 பிரகாரம் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் கண்ட சங்கதிகளுக்கு விரோதமாக வாய்மொழி சாட்சியம் அளிக்க முடியாது என்றும் தீர்மானித்துள்ளது. 4 வது பிரதிவாதியான கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு சொத்து உயில்படி பாத்தியப்பட்டது என்று அ.வ.எண்.405/94 வழக்கில் சாட்சியத்தில் பதிவாகவில்லை. அது குறித்து குறுக்குவிசாரணை கேள்வியும் கேட்கவில்லை என சொல்லப்பட்டுள்ளது.

**26**. இவைகளை ஒரு சேர பரிசீலிக்கும் போது கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு உயில் சாசனம் மூலமாக கிடைக்கப்பெற்ற சொத்து என கிரய

பத்திரத்தில் எழுதியுள்ளதால் தாவா சொத்து அவருக்கு தனித்து பாத்தியப்பட்டது என தீர்மானித்து வாதியோ அவரது மகன்களோ 4 வது பிரதிவாதியின் வாழ்நாளில் எந்தவிதமான உரிமையும் பெற்றிருக்கவில்லை. எனவே அந்த ஆவணத்தை ஆட்சேபிக்க அருகதை இல்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது.

**27**. அவ்வகையில் இந்த வழக்கில் வா.சா.ஆ.7 ல் கண்ட சொத்தானது அதன் கிரயதாரரான 3 வது பிரதிவாதியின் தகப்பனார் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்காருக்கு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் மூலம் கிடைக்கப்பட்ட சொத்து என்றும் அதற்கு தனித்த உரிமையாளர் நிலையில் 1ம் வாதிக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றும் முடிவு செய்யப்படுகிறது.

**28**. மேல் முறையீட்டு வழக்கு எண்.18/2002 ல் கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் இந்து அபிபக்த கூட்டுக்குடும்பத்தின் கர்த்தா என்ற முறையில் கிரையம் செய்து கொடுத்ததாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் தபசில் சொத்து 1ம் வாதி செங்கமலம் ஜானகிக்கு கிரய பாத்தியப்பட்டது என்றாலும் கிரயம் கொடுத்த கருடப்ப ஸ்ரீனிவாச அய்யங்கார் தனக்கு உயில் வழி பாத்தியப்பட்டு கிடைத்த சொத்தை செங்கமலம் ஜானகிக்கு தனித்த உரிமையாளராக இருந்து கிரயம் கொடுத்தார் என்றாலும் வா.சா.ஆ.7 செல்லத்தக்க கிரயமாகிறது. இந்து அபிபக்த கூட்டு குடும்ப கர்த்தா என்ற முறையில் கிரயம் செய்து கொடுத்துள்ளதாக மேல் முறையீட்டு வழக்கு எண்.18/2002 ல் தீர்மானிக்கப்பட்டுள்ளபடி வா.சா.ஆ-7 கிரயம் சட்டப்படி செல்லத்தக்கது. எனவே 1ம் வாதி பெயருக்கு உள்ள சட்டப்படி கிரயம் செல்லத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**29**. இந்த வழக்கு காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என பி.சா.1 /3 ம் பிரதிவாதி வழக்கை ஆட்சேபித்து சாட்சியம் சொல்லியுள்ளார். Ex.7 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரமானது ஆதியில் என் தந்தை வழி பூட்டனார் கெருடப்பன் தம்பு அய்யங்கார், எனது கொள்ளு தாத்தாவுமான கெருடப்பன், கெருடப்பன் ஸ்ரீனிவாச அய்யங்கார், மற்றும் அவரது சகோதரர்களான கெருடப்பன், ஆழ்வார் அய்யங்கார் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டு அவர்களிடையே 1887 ம்ஆண்டு பிறப்பிக்கப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலம் பாத்தியப்பட்டு (ஆழ்வார்திருநகரி சார்பதிவகம் 4841887 எங்களுக்கும் பாத்தியப்பட்டு பிரிக்கப்படாமல் கூட்டுக்குடும்ப சொத்தாக இன்று வரை அனுபவம் செய்து வருகிறோம்" என சாட்சியம் அளித்துள்ளார். அந்த பாகப்பிரிவினை ஆவணம் பி.சா.ஆ-1 ஆக குறியிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி பிவா.சாஆ.1 ஆவணம் படிப்பதற்கு தெளிவாக இல்லை. தெளிவான நகலை தாக்கல் செய்யவில்லை. ஆவண சங்கதிகள் குறித்து எதிர்வழக்குரையில் சொல்லவில்லை. மேற்படி சாட்சியத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் எதிர்வழக்குரையில் சொல்லப்படாத சங்கதிகள் என்பதால் பி.வா.சா.ஆ-1 குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**30**. இந்த வழக்கில் தாவா சொத்தின் பேரில் தனக்கு 1/5 பாகம் பாத்தியப்பட்டதாக கூறி பாகம்பிரித்து தரக்கேட்டு 3 வது பிரதிவாதி தாக்கல் செய்த அ.வ.எண்.405/94 வழக்கு 21.12.2001 ம் தேதியில் அனுமதிக்கப்பட்டுள்ளது. முன்னதாக 29.9.2000 ம்தேதியில் 1 வது வாதி தாக்கல் செய்துள்ள HMOP.No 1/99 தள்ளுபடி

செய்து தீர்ப்பாகிறது. அதன் பேரில் அசல் வழக்கு தாக்கல் செய்ய இருந்ததாகவும் அதற்குள்ளாக 3வது பிரதிவாதி வாதியாகவும், இந்த 1வது வாதியை 5வது பிரதிவாதியாகவும் அவரது கிரயதாரரை 4வது பிரதிவாதியாகவும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அந்த வழக்கிலேயே இந்த 1வது வாதி செங்கமலம் தபசில் சொத்து தனக்கு கிரயம் பாத்தியப்பட்டதாக எதிர் வியாஜ்ஜியம் செய்துள்ளார் என்றும் அந்த அசல் வழக்கு தள்ளுபடியானதன் பேரில் செங்கமலம் ஜானகி தாக்கல் செய்த மேல் முறையீட்டு வழக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது அவ்வகையில் செங்கமலம் ஜானகியின் கிரயம் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அதிலிருந்து ஓர் ஆண்டுக்குள்ளாக சொத்து தனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யும்படியும் சுவாதீன பரிகாரம் கேட்டும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். ஆகவே இந்த வழக்கானது கால வரையறைக்குள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் அறியமுடிகிறது. அ.வ.எண்.405/94 தீர்ப்பின் பேரில் 2025 ம் ஆண்டு வரை தொடர்ச்சியான மேல்முறையீட்டு வழக்கு, 2வது மேல்முறையீட்டு வழக்கு மாண்பமை உச்ச நீதிமன்றத்தில் SLP என தொடர்ந்து வழக்கு நடைபெற்று வந்த நிலையில் கால வரையறை சட்டம் பிரிவு 137 பிரகாரம் வழக்கு வாதிக்கு வழக்கு தாக்கல் செய்ததற்கான கால கெடு நீட்டிக்கப்பட்டு உள்ளதாகவும் தீர்மானிக்கப்படுகிறது. எனவே இந்த வழக்கு காலாவாதி தோசத்தால் பாதிக்கப்பட்டதாக கூறும் எதிர்வியாஜ்ஜியத்தை இந்த நீதிமன்றம் நிராகரிக்கிறது. எழுவினா 1,2 வாதிகளுக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது.

**31. எழுவினா 3**

| | |
|---|---|
| 3 | **வாதி கோரும் வாழ்விப்பு பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா?** |

எழுவினா 1,2 வாதிக்கு ஆதரவாக தீர்மானிக்கப்பட்டதை அடுத்து தாவா சொத்து வாதிக்கு கிரய பாத்தியப்பட்டது என்றும் தாவா சொத்தில் 3 வது பிரதிவாதியின் அனுபவமானது சட்டப்படியானது அல்ல என்றும் முடிவுசெய்யப்படுகிறது ஆகவே 3 வது பிரதிவாதி சொத்தின் சுவாதீனத்தை வாதியிடம் ஒப்படைத்து இந்த வாதிக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது.

**32. எழுவினா 4**

| | |
|---|---|
| 4 | **வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்னென்ன?** |

இதர பரிகாரங்கள் வழங்கும் அளவிற்கு உபய வாதிகள் தங்களது வழக்கை வனைந்துகொள்ளவில்லை. எனவே இதர பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல என இந்த எழுவினாவிற்கு இவ்வாறாக இந்த நீதிமன்றம் விடை காண்கிறது.

**முடிவில் வாதிகளின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், தாவா சொத்தின் சுவாதீனத்தை இந்த தீர்ப்பு தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள்ளாக வாதிகள் வசம் வாழ்விப்பு செய்து ஒப்படைக்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்தத் தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 3 ம் நாளன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2026.07.03 18:40:01 +0530

சார்பு நீதிபதி
திருவைகுண்டம்

**வாதி தரப்பு சாட்சி** -

வா.சா.1 - திருமதி.செங்கமலம் ஜானகி

வா.சா.2 - திரு.திருவடி

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** : -

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 29.09.2000 | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் RCOP.No.1/99 ன் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 29.09.2000 | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் RCOP.No.1/99 ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 21.12.2001 | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண்.405/94 ன் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 21.12.2001 | ஸ்ரீவைகுண்டம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அ.வ.எண்.405/94 ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.5 | 23.08.2004 | தூத்துக்குடி சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.18/2002 ன் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 23.08.2004 | தூத்துக்குடி சார்பு நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்கு எண்.18/2002 ன் தீர்ப்புரையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.7 | 29.10.1982 | வாதிக்கு G.P ஸ்ரீனிவாச அய்யங்கார் எழுதிக்கொடுத்த கிரய பத்திரம்- சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.8 | 1995 முதல் 2000<br>2003 முதல் 2006 | வாதி பெயருக்குரிய 134 ம் வீட்டுக்கு செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் 8 |
| வா.சா.ஆ.9 | 1995 முதல் 2000<br>2003 முதல் 2006 | வாதி பெயருக்கு 135 ம் நிர் வீட்டுக்கு செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் 8 |
| வா.சா.ஆ.10 | 1995 முதல் 2000<br>2003 முதல் 2006 | வாதி பெயருக்கு 136 ம் வீட்டுக்கு செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் 8 |
| வா.சா.ஆ.11 | 1995 முதல் 2000<br>2003 முதல் 2006 | வாதி பெயருக்கு 10 ம் நிர் வீட்டுக்கு செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் 8 |
| வா.சா.ஆ.12 | 1995 முதல் 2000<br>2003 முதல் 2006 | வாதி பெயருக்கு 11 ம் நிர் வீட்டுக்கு செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் 8 |
| வா.சா.ஆ.13 | 1995 முதல் 1999<br>2003 முதல் 2006 | வாதி பெயருக்கு 12 ம் நிர் வீட்டுககு செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீதுகள் 6 |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.14 | 07.04.2025 | உயர் நீதிமன்றம் மதுரை கிளையின் SA(MD) No.374/2004 ன் தீர்ப்புரை |
| வா.சா.ஆ.15 | 07.04.2025 | உயர் நீதிமன்றம் மதுரை கிளையின் SA(MD) No.374/2004 ன் தீர்ப்பாணை |
| வா.சா.ஆ.16 | 22.09.2025 | மாண்புமிகு உச்ச நீதிமன்ற I.A.No.231530/2025 ன் உத்தரவு நகல இணையதள நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி</u>**

பி.வா.சா.1 - திரு.கருடப்ப ராமானுஜம்

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | - | பாகப்பிரிவினை ஆவணம் எண்.484/1887-சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 29.10.1982 | கிரைய பத்திரம் ஆவண எண்.905/1982 ன் மின் கட்டண ரசீது எண்ணம் 5 அசல் |

BARSAD BEGUM A
Digitally signed by BARSAD BEGUM A
Date: 2026.07.03 18:40:10 +0530

**சார்பு நீதிபதி**

**திருவைகுண்டம்**

சார்பு நீதிமன்றம், தூத்துக்குடி.

அ.வ.எண். 349/2023

நேரிய / வரைவு தீர்ப்புரை

தேதி - 03.07.2026